DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 2 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW- 3** |
| **Name** | **:** | சிவராஜ் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**16.7.2025**

**முதல் விசாரணை :**

நான் கூடலூர் காலம்புலாவில் குடியிருக்கிறேன். நான் லாரி கிளீனராக வேலை செய்கிறேன். இவ்வழக்கில் புகார் கொடுத்த அ.சா.1 என் மகள், அ.சா.2 சீதாலட்சுமி என் மனைவி ஆவார். எனக்கு அ.சா.1 ஒரு மகளும், துரைமுருகன் என்ற ஒரு மகனும் இருக்கிறார்கள். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி அமீரையும், 2ஆம் எதிரி நிஜாமுதினையும் தெரியும். என் மகள் அ.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 2ஆம் எதிரி நிஜாமுதினால் கர்ப்பமடைந்தார். 1ஆம் எதிரி அமீருக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை, என் மனைவிதான் 1ஆம்

எதிரி அமீர் பெயரை முதலில் சொல்லியுள்ளார். என் மகள் அ.சா.1 அவர் கர்ப்பமானதால் புகார் கொடுத்தார். என் மகள் அ.சா.1 இவ்வழக்கில் புகார் கொடுத்தபிறகு அரசாங்கத்திடம் இருந்து ரூபாய் 2,00,000/- பெற்றார். அ.சா.1 கர்ப்பத்தை பற்றி நான் அவரிடம் கேட்டபோது 2ஆம் எதிரி நிஜாமுதின் பெயரைதான் சொன்னார். என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி நீதிமன்றம் அனுமதி அளித்தபிறகு, அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என் மகள் அ.சா.1 10வது படித்து பெயில் ஆனதால் தையல் பயிற்சி வகுப்பிற்கு சென்றார் என்று சொன்னால், ஆமாம். 1ஆம் எதிரி அமீர் என் பக்கத்து வீட்டுகாரர். என் மகள் அ.சா.1ஐ 1ஆம் எதிரி அமீர் அடிக்கடி பைக்கில் அழைத்து சென்று டிராப் செய்துள்ளார் என்று சொன்னால், சரியில்லை. 4.2.2021ஆம் தேதி காலை 11.00 மணியளவில் 1ஆம் எதிரி அமீர் எங்கள் வீட்டிற்கு வந்து சாமி அறையில் பேசிக்கொண்டு இருந்தபோது என் மகள் அ.சா.1ஐ கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து வலுக்கட்டாயமாக அவரோடு உடலுறவு வைத்துக்கொண்டார் என்று சொன்னால், சரியில்லை. 1ஆம்எதிரி அமீர் முஸ்லீம் மதத்தை சேர்ந்தவர், நாங்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியை சேர்ந்தவர்கள் என்பது 1ஆம் எதிரி அமீருக்கு தெரியும். 1ஆம் எதிரி அமீர் என் மகள் அ.சா.1ஐ திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி அவரோடு

கட்டாய உடலுறவு வைத்தார் என்று சொன்னால், அப்படி இல்லை.

கடந்த 11.2.2021ஆம் தேதி என் மகள் அ.சா.1 வழக்கம் போல் கூடலூரில் வேலை முடித்துவிட்டு மாலை சுமார் 6.00 மணி அளவில் வீட்டிற்கு செல்வதற்காக கூடலூர், சுங்கம் ரவுண்டானா அருகே நின்றிருந்தபோது, 2ஆம் எதிரி நிஜாமுதின் என் மகளை வீட்டில் விடுவதாக சொல்லி, அவர் வழக்கமாக ஓட்டி வந்த TN 43 Y 5283 என்ற எண்ணுள்ள ஆட்டோவில் என் மகள் அ.சா.1ஐ ஏற்றிக்கொண்டு வீட்டிற்கு போகும்போது, கூடலூர் தொரப்பள்ளி ஆர்டிவோ அலுவலகம் தாண்டி ஆட்டோவை நிறுத்திவிட்டு முங்கில் காட்டிற்குள் என் மகள் அ.சா.1ஐ கூட்டிச்சென்று பேசிக்கொண்டு இருந்ததாகவும், அப்போது 2ஆம் எதிரி நிஜாமுதின் என் மகள் அ.சா.1ஐ கட்டிபிடித்து அவரை கல்யாணம் செய்து கொள்வதாக சொல்லி என் மகள் அ.சா.1னோடு கட்டாயமாக உடலுறவு வைத்துக்கொண்டார், அதன்பிறகு 2ஆம் எதிரி நிஜாமுதின் என் மகள் அ.சா.1ஐ சமாதானம் செய்து வீட்டில் விட்டுவிட்டு போனார் என்று என் மகள் என்னிடம் சொன்னார் என்று சொன்னால், சரியில்லை.

என் மகள் அ.சா.1 வேலை முடிந்து வரும்போது அடிக்கடி என் மகள் அ.சா.1ஐ 2ஆம் எதிரி நிஜாமுதின் தர்மகிரி ரோட்டில் வலது புறம் உள்ள டீக்காட்டிற்கு அழைத்துச்சென்று என் மகள் அ.சா.1ஐ கட்டாயப்படுத்தி, ஆசை வார்த்தை கூறி, திருமணம்

செய்து கொள்வதாக கூறி பலமுறை என் மகள் அ.சா.1ஐ உடலுறவு வைத்துக்கொண்டார் என்றும், 2ஆம் எதிரி நிஜாமுதின் என் மகள் அ.சா.1ஐ கட்டாயப்படுத்திதான் அவரோடு உடலுறவு வைத்துக்கொண்டார் என்று என் மகள் அ.சா.1 என்னிடம் சொன்னார் என்று சொன்னால், அதெல்லாம் எனக்கு தெரியாது.

என் மகள் அ.சா.1 கர்ப்பம் ஆனதால், என் மனைவி என் மகள் அ.சா.1ஐ மருத்துவமனைக்கு கூட்டி சென்று பரிசோதனை செய்ததிலும், என் மகள் அ.சா.1 கர்ப்பமானது தெரியவந்த பிறகு என் மனைவி 2ஆம் எதிரி நிஜாமுதின் வீட்டிற்கு சென்று பேசியபோது என் மகள் அ.சா.1ஐ கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன் என்று சொன்னார்கள் என்று சொன்னால், நாங்கள் 2ஆம் எதிரி நிஜாமுதின் வீட்டிற்கு போனபோது அவர்கள் 2ஆம் எதிரி நிஜாமுதினை என் மகள் அ.சா.1ற்கு திருமணம் செய்து வைப்பததாகதான் சொன்னார்கள்.

பிறகு 12.8.2021ஆம் தேதி மதியம் என் மகள் அ.சா.1க்கு உடம்பு சரியில்லாமல் போனதால் என் மனைவி அவரை கூடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று என் மகள் அ.சா.1ஐ சிகிச்சையில் சேர்த்தார் என்று சொன்னால், ஆமாம்.

என் மகள் அ.சா.1 கூடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, என் மகள் அ.சா.1ற்கு திருமணம் ஆகாமலேயே அவர் கர்ப்பம் அடைந்தது தெரியவந்து கூடலூர்

அனைத்து மகளிர் காவல் நிலைய போலிசார் மருத்துவமனைக்கு வந்து அவரிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று சொன்னால், ஆமாம். என் மகள் அ.சா.1ற்கு 3.11.2021ஆம் தேதி பெண் குழந்தை பிறந்தது என்று சொன்னால், ஆமாம். என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், ஆனால் நான் 1ஆம் எதிரி அமீரையும், 2ஆம் எதிரி நிஜாமுதினையும் காப்பாற்றுவதற்காக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**1ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

இல்லை.

**2ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

என் மகள் அ.சா.1, 2ஆம் எதிரி நிஜாமுதினை திருமணம் செய்து அவர்களுக்கு முதலில் ஒரு குழந்தையும், பிறகு 2வது குழந்தை பிறந்து அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், ஆமாம்.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.07.16 18:11:55 +0530